# Tnpsc Model Question Paper 12 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. BAT = 23, CAT = 24 என்றால் BOY என்பது எதைக் குறிக்கும்?
**(அ) 42** (ஆ) 24 (இ) 23 (ஈ) 41

2. A, B, C, D, E, F, G, H என்ற ஆங்கில எழுத்துக்கள் முறையே 2, 4, 6, 8, 10, 12, 14, 16 என்ற எண்களை குறிக்கின்றன எனில் $\left(F \div \sqrt{B}\right) + \left(\sqrt{A} \times \sqrt{D}\right)$ ன் மதிப்பை காண்க:
**(அ) E** (ஆ) F (இ) G (ஈ) H

3. A ஆனவர் B–ஐ காட்டிலும் 3 மடங்கு வேகமாக ஒரு வேலையை செய்து முடிப்பார். அவரால் அந்தப் பணியை B எடுத்துக் கொண்ட நேரத்தை விட 24 நாட்கள் குறைவாக எடுத்து முடிக்க முடிகிறது. இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க ஆகும், நேரத்தை காண்க:
**(அ) 9 நாட்கள்** (ஆ) 12 நாட்கள் (இ) 3 நாட்கள் (ஈ) 6 நாட்கள்

4. "ZGP" என்பது "WIN" என்ற வார்த்தையை குறித்தால், "VMR" என்பது குறிக்கும் சொல்
(அ) WLS **(ஆ) SOP** (இ) UPQ (ஈ) TAP

5. ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க:
**(அ) 7 மீ** (ஆ) 4 மீ (இ) 6 மீ (ஈ) 9 மீ

6. ரூ.15, 625 க்கு ஆண்டு வட்டி 8% வீதம் எனில் 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டியைக் காண்க:
(அ) ரூ.4063 (ஆ) ரூ.4508 **(இ) ரூ.4058** (ஈ) ரூ.4085

7. a, b, c, d மற்றும் e–இன் சராசரி 28. a, c மற்றும் e–இன் சராசரி 24, எனில் b மற்றும் d–இன் சராசரி
(அ) 24 (ஆ) 36 (இ) 26 **(ஈ) 34**

8. ரூ.16, 000 தற்போதைய மதிப்புள்ள ஓர் இயந்திரம் தன் மதிப்பில் ஆண்டுக்கு 10% குறைந்தால், எத்தனை ஆண்டுகளில் அது தற்போதைய மதிப்பில் பாதி மதிப்பாகும்?
(அ) 2 ஆண்டுகள் (ஆ) ஆண்டுகள் (இ) 4 ஆண்டுகள் **(ஈ) 5 ஆண்டுகள்**

9. ரூ.1–க்கும் 20 பைசாவுக்கும் உள்ள விகிதம்
(அ) 1 :5 (ஆ) 1 : 2 (இ) 2 : 1 **(ஈ) 5 : 1**

10. ஒரு வீட்டில் நான்கு அலைபேசிகள் உள்ளன. காலை 5 மணிக்கு, எல்லா அலைபேசிகளும் ஒன்றாக ஒலிக்கும். அதன்பின், முதல் அலைபேசியானது ஒவ்வொரு 15 நிமிடங்களிலும் இரண்டாவது அலைபேசியானது ஒவ்வொரு 20 நிமிடங்களிலும் மூன்றாவது அலைபேசியானது ஒவ்வொரு 25 நிமிடங்களிலும் மற்றும் நான்காவது அலைபேசியானது ஒவ்வொரு 30 நிமிடங்களிலும் ஒலிக்கின்றன எனில், அவை மீண்டும் எப்போது ஒன்றாக ஒலிக்கும்?
(அ) காலை 7 மணி (ஆ) காலை 8 மணி (இ) காலை 9 மணி **(ஈ) காலை 10 மணி**

11. இரண்டு பகா எண்களின் மீ.பொ.வ.
(அ) –1 (ஆ) 0 **(இ) 1** (ஈ) 2

12. 250 லிட்டரின் 12% என்பது 150 லிட்டரின் –––––––––––––க்குச் சமமாகும்.
(அ) 30% **(ஆ) 20%** (இ) 15% (ஈ) 10%

13. ஒரு பள்ளிகளில் 560 மாணவர்கள் உள்ளனர். அதில் 320 பேர் சிறுவர்கள் எனில், அந்தப் பள்ளியிலுள்ள சிறுமிகளின் சதவீதத்தைக் கண்டறியவும்.

(அ) 41% **(ஆ) 42.86%** (இ) 43.8% (ஈ) 44%

14. பின்வருவனவற்றை பொருத்தவும்.

அ. IIPGCMS 1. மின் ஆளுமை மற்றும் பாதுகாப்பு
ஆ. CERT–TN 2. MSMEக்கான தொழில் கடன்
இ. ECLGS 3. கிராமப்புற தொழில்களுக்கு புத்துயிர்
ஈ. TNRTP 4. உதவி மைய மேலாண்மை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **2** | **3** |
| ஆ. | 3 | 2 | 4 | 1 |
| இ. | 3 | 4 | 1 | 2 |
| ஈ. | 2 | 3 | 4 | 1 |

15. தமிழக கல்லூரிகளில் தமிழை பயிற்று மொழியாக அறிமுகப்படுத்திய ஆண்டு

(அ) 1980 (ஆ) 1972 (இ) 1982 **(ஈ) 1970**

16. ஓய்வூதியதாரர்களுக்கான மின்னணு ஆயுள் சான்றிதழின் பெயர் என்ன?

(அ) ஜீவன் ஜோதி **(ஆ) ஜீவன் பிரமாண்** (இ) இந்திர தனுஷ் (ஈ) நிதி ஆயோக்

17. தமிழகத்தின் உள்ள மொத்த இட ஒதுக்கீடு ------------ சதவீதம்

**(அ) 69** (ஆ) 67 (இ) 68 (ஈ) 70

18. கிராமப்புற பெண்கள் பொருளாதார ரீதியில் அதிகாரமடைத்தலுக்கென, ஸ்திரி சக்தி திட்டம், ----------- மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா **(இ) கர்நாடகா** (ஈ) ஆந்திர பிரதேசம்

19. 1937–40ல் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர் யார் என்பதைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

(அ) பத்மாவதி ஆஷார் (ஆ) லீலாவதி (இ) ருக்மணி இலக்ஷ்மிபதி **(ஈ) மூவலூர் இராமமிர்தம்**

20. ஜஸ்டிஸ் கட்சியின் முந்தைய பெயர்

(அ) மதராஸ் மகாஜன சபை (ஆ) மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன்
**(இ) தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு** (ஈ) திராவிடர் கழகம்

21. பட்டியல் I–ஐ பட்டியல் II–உடன் பொருத்தி, கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையை தெரிவு செய்க:

பட்டியல் – I சுதந்திர போராட்ட வீரர்கள் பட்டியல்–II பிறந்த இடம்
அ. செண்பகராமன் 1. செங்கோட்டை
ஆ. மாடசாமி 2. வத்தலகுண்டு
இ. வாஞ்சிநாதன் 3. நாஞ்சில் நாடு
ஈ. சுப்ரமணிய சிவா 4. ஒட்டபிடாரம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **4** | **1** | **2** |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| இ. | 2 | 4 | 3 | 1 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

22. மக்கட் பண்பு இல்லாதவர்கள் எதற்குச் சமமானவர்கள்? என்கிறார் வள்ளுவர்

(அ) எலும்புதோல் போர்த்தவர் **(ஆ) மரம் போன்றவர்**
(இ) நடை பிணம் போன்றவர் (ஈ) விலங்கு போன்றவர்

23. வள்ளுவர் கூற்றுப்படி மழலைச் சொல் கேளாதவர் எவற்றை இனிது என்பார்கள்?
**(அ) குழலிசை, யாழிசை** (ஆ) குழலிசை, மத்தள இசை
(இ) யாழிசை, வீணையிசை (ஈ) வீணையிசை, குழலிசை

24. தமிழுக்கு "கதி" என்று அழைக்கப்படுபவர்கள்
(அ) இளங்கோ, புகழேந்தி **(ஆ) கம்பர், திருவள்ளுவர்** (இ) ஔவையார், பரணர் (ஈ) கபிலர், பரணர்

25. இரவலர்க்குக் குதிரைகள் நல்கிய கடையெழு வள்ளர் யார்?
(அ) அதியமான் (ஆ) பாரி **(இ) காரி** (ஈ) ஆய்அண்டிரன்

26. தமிழகத்தில் எவ்விடத்தில் ரோமானிய குடியரசு காசுகள் கிடைத்தன?
(அ) சென்னை **(ஆ) கரூர்** (இ) மதுரை (ஈ) தஞ்சாவூர்

27. மருத குலத்தில் வாழும் மக்கள்
(அ) குறவர் **(ஆ) உழவர்** (இ) இடையர் (ஈ) ஆயர்

28. கீழ்கண்ட பத்திரிக்கைகளில் மகாத்மா காந்தி ஆரம்பிக்காத அவரோடு தொடர்பற்ற பத்திரிக்கை எது?
(அ) இந்தியன் ஒப்பினியன் (ஆ) எங் இந்தியா (இ) நவஜீவன் **(ஈ) ஹிந்துஸ்தான் டைம்ஸ்**

29. ஆங்கிலேயர்கள் தங்கள் கவனத்தை வ.உ.சிதம்பரம் பெயரில் செலுத்தக் காரணம் எது?
(அ) வ.உ.சி. கடல் கடந்த வாணிபத்தின் பண்டைய பெருமையை மீண்டும் ஏற்படுத்தினார்.
(ஆ) நீராவி கப்பல் கம்பெனியின் பங்குகளை விற்றார்
(இ) வ.உ.சி. மக்களின் கவனத்தை சுதேசி இயக்கத்தின் பால் ஈர்த்தார்
**(ஈ) சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை தொடங்கினார்**

30. --------- என்பவர் பகத்சிங்-ன் மாமா மற்றும் பாரத மாதா கழகம் என்ற அமைப்பை தோற்றுவித்தவராவார்.
(அ) அர்ஜீன் சிங் **(ஆ) அஜித் சிங்** (இ) பல்பீர் சிங் (ஈ) குல்தீப் சிங்

31. சுயராஜ்ய கட்சியை ஆரம்பித்தவர்
(அ) பால கங்காதர திலகர் **(ஆ) சித்தரஞ்சன் தாஸ் மற்றும் மோதிலால் நேரு**
(இ) பிபின் சந்திர பால் (ஈ) அன்னிபெசண்ட்

32. எந்த ஐந்தாண்டுத் திட்டமானது "விரைவான நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி" என்பதை நோக்கம் மற்றும் உத்தியாகக் கொண்டிருந்தது?
(அ) 10வது திட்டம் **(ஆ) 12 வது திட்டம்** (இ) 9 வது திட்டம் (ஈ) 8 வது திட்டம்

33. பின்வருவனவற்றுள் எது விவசாய பொருட்களின் விலைக் கொள்கை கருவிகள் இல்லை?
(அ) இடையக பங்கு (ஆ) ஆதரவு விலைகள்
(இ) கொள்முதல் விலைகள் **(ஈ) விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து தருதல்**

34. மானிய உதவி மாநிலங்களுக்கு வழங்கப்படுவது ஏன்?
(அ) மத்திய-மாநிலங்களுக்கு இடையே நல்ல உறவுகளை பராமரித்தல்
(ஆ) மாநில வரவு செலவுத் திட்டங்களில் வழக்கமான இடைவெளிகளை நிரப்புவதற்காக
(இ) மாநில திட்டங்களுக்கு நிதியளிக்க
**(ஈ) அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநிலங்களுக்கு உதவுதல்**

35. இந்திய கூட்டாட்சி முறையை "கூட்டுறவுக் கூட்டாட்சி" என விவரித்தவர் யார்?
**(அ) கிரான்வில் ஆஸ்டின்** (ஆ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் (இ) ஜவஹர்லால் நேரு (ஈ) D.C.வேரீ

36. கீழ்கண்டவற்றுள் எது ஒரு குடிமகனின் கடமையல்ல?

(அ) அரசியலமைப்புக்கு ஏற்ப நடந்து அதனுடைய கோட்பாடுகள் நிறுவனங்கள், தேசிய கொடி மற்றும் தேசிய கீதம் ஆகியவற்றை மதித்து நடத்தல்
(ஆ) இந்தியாவின் இறைமை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பேணி பாதுகாக்க வேண்டும்
(இ) தேவைப்படும் போது எல்லாம் நாட்டை பாதுகாப்பதும், நாட்டுக்கு சேவை செய்யவும் வேண்டும்
**(ஈ) கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும்**

37. பஞ்சாயத்து ராஜ் பற்றிய குழுக்களை அதன் தலைவருடன் பொருத்துக:

| பஞ்சாயத்து | தலைவர் |
|---|---|
| அ. பஞ்சாயத்து ராஜ் தேர்தல் | 1. ஜி.ராமச்சந்திரன் |
| ஆ. பஞ்சாயத்து ராஜ் பயிற்சி மையங்கள் | 2. வி.ஆர்.ராவ் |
| இ. சமுதாய மேம்பாடும் பஞ்சாயத்துராஜீம் | 3. கே.சந்தானம் |
| ஈ. பஞ்சாயத்துராஜின் புள்ளியியல் பகுப்பாய்தல் | 4. திருமதி தயா சவுபே |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| **ஆ.** | **3** | **1** | **4** | **2** |
| இ | 4 | 1 | 2 | 3 |
| ஈ. | 1 | 3 | 4 | 2 |

38. இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை வடிவத்தை மாற்ற இயலாது என்று கூறிய வழக்கு எது?
(அ) சங்கரி பிரசாத் Vs. இந்திய ஒன்றியம் (ஆ) கோலக் நாத் Vs. பஞ்சாப் மாநிலம்
**(இ) கேசவானந்த பாரதி Vs. கேரள அரசு** (ஈ) மினர்வா மில் Vs. இந்திய ஒன்றியம்

39. இந்தியாவிலுள்ள "சாங்போ" இனத்தவரை குறிப்பிடுகையில் கீழே உள்ள அறிக்கைகளில் எது சரியானதாக கருதப்படுகிறது.
1. அவர்கள் முக்கியமாக உத்ரகாண்ட் மாநிலத்தின் வாழ்கிறார்கள்.
2. அவர்கள் பஸ்நினா என்ற வெள்ளாட்டிலிருந்து அதிகப்படியான கம்பளியை பெறுகின்றனர்.
3. அவர்கள் மலைவாழ் இனத்தவர் என்ற பிரிவில் இருக்கின்றனர்.
(அ) 1 மட்டும் **(ஆ) 2 மற்றும் 3 மட்டும்** (இ) 3 மட்டும் (ஈ) 1, 2 மற்றும் 3

40. விஜய நகர பேரரசின் வளத்தை குறிப்பிடும்பொழுது கீழ்வருவனவற்றை கவனிக்கவும்.
1. விஜய நகர பேரரசின் வளர்ச்சிக்கு காரணம் அதன் விவசாயம், தொழிற்சாலை, வாணிபம்.
2. மாநிலங்கள் நீர்ப்பாசன முறையை கடைப்பிடித்தது.
3. தொழிற்சலைகளுக்கு மாநிலம் முக்கியத்துவம் கொடுத்தது.
4. வாணிபம் உள்நாடு, கடற்கரை ஓரம், வெளிநாட்டைச் சார்ந்தது.
மேலே கூறப்பட்டுள்ள கூற்றின் கால நிகழ்வில் எது சரியானவை?
**(அ) 1–2–3–4** (ஆ) 4–3–2–1 (இ) 2–3–4–1 (ஈ) 3–1–4–2

41. சிந்து சமவெளி மக்களின் சமய நம்பிக்கையில் கீழ்க்கண்ட கூற்றில் எவை சரியானவை?
1. தாய் வழிபாடு கலாச்சாரம் சமுதாயத்தில் உள்ளது.
2. உருவ வழிபாட்டில் கடவுள் வழிபாடு என்று வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டது.
**(அ) 1 மற்றும் 2** (ஆ) 1 (இ) 2 (ஈ) 1ம் அல்ல 2ம் அல்ல

42. ஒளி வேதிப்புகை மூட்டத்தில் உள்ள முக்கிய வாயுக்கூறுகள் யாவை?
(அ) நைட்ரஜன் ஆக்ஸைடுகள், CO மற்றும் $SO_2$
(ஆ) நைட்ரஜன் ஆக்ஸைடுகள், CO மற்றும் $H_2S$
**(இ) நைட்ரஜன் ஆக்ஸைடுகள், ஓசோன் ஹைட்ரோ கார்பன்கள்**
(ஈ) நைட்ரஜன் ஆக்ஸைடுகள், $SO_2$ மற்றும் ஹைட்ரோ கார்பன்கள்

43. பசுமை மாறாக் காடுகள் காணப்படும் மாநிலம்
**(அ) அருணாச்சலப் பிரதேசம்** (ஆ) ஒடிசா (இ) மேற்கு வங்காளம் (ஈ) ஆந்திரப்பிரதேசம்

44. இந்திய திட்ட நேரத்தை கணக்கிட பயன்படுத்தப்படும் தீர்க்கரேகையானது
(அ) 37° 6' கி (ஆ) 68 ° 7' கி (இ) 97 ° 25' கி **(ஈ) 82 ° 30' கி**

45. FAME திட்டத்தின் நோக்கம்
**(அ) பொது போக்குவரத்தை மின்மயமாக்க**
(ஆ) கிராமப்புறங்களில் உள்ள குடும்பங்களை மின்மயமாக்க
(இ) நகர்ப்புறங்களில் உள்ள குடும்பங்களை மின்மயமாக்க
(ஈ) பூங்காக்கள் மற்றும் கடற்கரையை மின்மயமாக்க

46. "குடியரசு" எனும் பதம் முதன் முதலில் சொல்லப்பட்ட இடம்
(அ) கிரேக்கம் **(ஆ) ரோம்** (இ) ஜெர்மனி (ஈ) பிரான்சு

47. கீழ்காணப்படும் பழங்குடியினர் மற்றும் அவர்களின் இருப்பிடம், எது/எவை சரியாக பொருத்தப்பட்டுள்ளன?

| பழங்குடியினர் (பெயர்) | இருப்பிடம் |
|---|---|
| அ. ஜாராஸ் | அந்தமான் நிகோபார் தீவுகள் |
| ஆ. காக்ரா | உத்திரப்பிரதேசம் |
| இ. கோராகா | தமிழ்நாடு |
| ஈ. ரத்தவா | பீஹார் |

**(அ) அ மற்றும் இ** (ஆ) ஆ மற்றும் ஈ (இ) அ மற்றும் ஆ (ஈ) இ மற்றும் ஈ

48. விலங்குகளின் ஒரு பகுதி மற்றொரு பகுதியோடு அடிப்படையில் ஒத்திருப்பது ----------- என்று அழைக்கப்படுகிறது.
**(அ) சீரியல் ஹோமாலஜி** (ஆ) சீரியல் இணையுறுப்புகள்
(இ) சீரியல் வாயுறுப்புகள் (ஈ) வெஸ்டிஜியல் உறுப்புகள்

49. d–தொகுதி தனிமங்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறது
(அ) உள்இடைநிலைத் தனிமங்கள் **(ஆ) இடைநிலைத் தனிமங்கள்**
(இ) கார உலோகங்கள் (ஈ) கார மண் உலோகங்கள்

50. கீழ்காண்பவற்றுள் எது சரியான கூற்று?
**(அ) எந்த பொருளும் ஒளியின் வேகத்தை தாண்டாது**
(ஆ) ஒரு பொருளின் எடை எப்போதும் மாறாதது
(இ) ஒரு பொருளின் எடை அதன் வேகத்தை பொறுத்ததல்ல
(ஈ) சுழி நிலை எடையுள்ள எந்தத் துகளும் இல்லை

51. பொருள் உணராமல் கற்றல் எங்கு பயன்படுத்தப்படலாம் என்பதை அடையாளம் காண்க:
(அ) அணுக்கள் மற்றும் கூறுகளைப் பற்றி கற்றல் **(ஆ) பெருக்கல் அட்டவணைகளை கற்றல்**
(இ) ஒரு கனச்செவ்வகம் பற்றி கற்றல் (ஈ) சமநிலை பற்றி கற்றல்

52. 12 செ.மீ, 13 செ.மீ. ..., 23 செ.மீ. ஆகியனவற்றை முறையே பக்க அளவுகளாகக் கொண்ட 12 சதுரங்களின் மொத்தப் பரப்பளவு காண்க:
**(அ) 3818 ச.செ.மீ** (ஆ) 650 ச.செ.மீ (இ) 4324 ச.செ.மீ (ஈ) 506 ச.செ.மீ

53. பின்வரும் தொடரில் விடுபட்ட எண்ணைக்காண்க:
7, 26, 63, 124, 215, 342, ----------
(அ) 391 (ஆ) 421 (இ) 471 **(ஈ) 511**

54. 48 ஆண்கள் ஒரு வேலையை நாளொன்றுக்கு 7 மணி நேரம் வேலை செய்து 24 நாட்களில் முடிப்பர் எனில் 28 ஆண்கள் அதே வேலையை நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்து எத்தனை நாட்களில் முடிப்பர்?
**(அ) 36 நாட்கள்** (ஆ) 46 நாட்கள் (இ) 38 நாட்கள் (ஈ) 40 நாட்கள்

winmeen.com

55. இரண்டு குழந்தைகள் உள்ள ஒரு குடும்பத்தில், குறைந்தது ஒரு பெண்ணாவது இருப்பதற்கான நிகழ்தகவு
**(அ) 3/4** (ஆ) 1/2 (இ) 1/4 (ஈ) 1

56. A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாட்களில் முடிப்பார் எனில், B தனியே அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?
(அ) 3 நாட்கள் (ஆ) 12 நாட்கள் **(இ) 24 நாட்கள்** (ஈ) 32 நாட்கள்

57. ஒரு சாய் சதுரத்தின் ஒரு மூலைவிட்டம் மற்றதைக் காட்டிலும் மூன்று மடங்கு மூலை விட்டங்களின் கூடுதல் 52 செ.மீ. எனில், சாய்சதுரத்தின் பரப்பளவு?
(அ) 507 செ.மீ$^2$ (ஆ) 254 செ.மீ$^2$ **(இ) 253 1/2 செ.மீ$^2$** (ஈ) 507 செ.மீ$^2$

58. 10% ஆண்டு வட்டியில், அரையாண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்பட்டால், ரூ.4400 ஆனது ரூ.4851 ஆக எடுத்து கொள்ளும் நேரம் --------------- ஆகும்
(அ) 6 மாதங்கள் **(ஆ) 1 ஆண்டு** (இ) 1 1/2 ஆண்டுகள் (ஈ) 2 ஆண்டுகள்

59. ஓர் அசலானது 2 ஆண்டுகளில், ஆண்டுக்கு 4% கூட்டு வட்டியில் ரூ.2028 ஆக ஆகிறது. எனில், அசலைக் காண்க:
(அ) ரூ.1775 (ஆ) ரூ.1785 **(இ) ரூ.1875** (ஈ) ரூ.1885

60. 180 மீ நீளமுள்ள ஒரு பாயினை 15 பெண்கள் 12 நாட்களில் செய்தனர். 512 மீ நீளமுள்ள ஒரு பாயினை 32 பெண்கள் செய்ய எத்தனை நாட்கள் ஆகும்?
**(அ) 16** (ஆ) 18 (இ) 14 (ஈ) 12

61. இரு எண்கள் 2 : 5 எனும் விகிதத்தில் உள்ளன. ஒவ்வொரு எண்ணுடனும் 4-ஐக் கூட்டினால் அவற்றின் விகிதம் 4 : 9 என அமையும் எனில் அவ்விரு எண்கள்
(அ) 16 மற்றும் 40 (ஆ) 18 மற்றும் 45 **(இ) 20 மற்றும் 50** (ஈ) 22 மற்றும் 55

62. 8, 9, 12 ஆகிய எண்களால் வகுபடும் மிகப்பெரிய 4 இலக்க எண் என்ன?
(அ) 9999 (ஆ) 9996 (இ) 9696 **(ஈ) 9936**

63. 101, 126 மற்றும் 152-ஐ வகுக்கும் போது முறையே 5, 6 மற்றும் 8-ஐ மீதிகளாகக் கொடுக்கும் மிகப்பெரிய எண் யாது?
(அ) 18 **(ஆ) 24** (இ) 26 (ஈ) 25

64. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கருத்தில் கொள்க:
1. மாநில அரசின் பல்வேறு துறைகளில் மின்-ஆளுமை அமலாக்கத்திற்கு வழிகாட்டுதல்.
2. தமிழ் மொழி மற்றும் தமிழ் யூனிகோட் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
3. அரசின் உறபத்தி திறன் அளவை ஊக்குவித்தல்.
4. B2B மற்றும் B2C-யின் தடையில்லா பணிகளுக்கு ஆதரவளித்தல்.
5. G2G மற்றும் G2C-யின் தடையில்லா பணிகளுக்கு ஆதரவளித்தல்.
6. அகண்ட அலைவரிசை பயன்பாட்டை அதிகரித்தல்.
மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள் தமிழக அரசின் மின் ஆளுமைக் கொள்கை 2017-ன் நோக்கங்களை கண்டறிந்து குறிப்பிடு
(அ) 1, 2, 4, 5 மற்றும் 6 (ஆ) 1, 2 மற்றும் 4 மட்டும்
**(இ) 1, 2, 3, 4 மற்றும் 6** (ஈ) 1, 4 மற்றும் 6 மட்டும்

65. இந்தியாவில் மொத்தம் 13 பெரிய துறைமுகங்கள் உள்ளன. அவற்றில் 12 அரசு துறைமுகங்கள் ---------- ஒன்று மட்டும் பெரு நிறுவன துறைமுகமாகும்.
(அ) தூத்துக்குடி துறைமுகம் (ஆ) போர்ட் பிளைர் துறைமுகம்
**(இ) எண்ணூர் துறைமுகம்** (ஈ) சென்னை துறைமுகம்

66. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக:

| திட்டம் | பெயர் |
|---|---|
| அ. மகப்பே றுநல உதவித்திட்டம் | 1. அன்னை தெரசா |
| ஆ. வளரிளம் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் | 2. சத்தியவாணி முத்து அம்மையார் |
| இ. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 3. ராஜீவ் காந்தி |
| ஈ. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நிதி உதவித்திட்டம் | 4. இந்திரா காந்தி |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 2 | 4 |
| ஆ. | 4 | 2 | 3 | 1 |
| இ. | 1 | 4 | 2 | 3 |
| **ஈ.** | **4** | **3** | **2** | **1** |

67. டாக்டர் முத்துலெட்சுமி எந்த சமுதாய தீமைக்கு எதிராக போராடினார்?
(அ) குழந்தைத் திருமணம் **(ஆ) தேவதாசி அமைப்பு** (இ) வரதட்சணை அமைப்பு (ஈ) பலதார மணம்

68. "பெண் வேலை பங்கேற்பு விகிதம்" அதிகம் கொண்ட மாவட்டம்
(அ) காஞ்சிபுரம் (ஆ) சென்னை (இ) கோயம்புத்தூர் **(ஈ) பெரம்பலூர்**

69. காமராஜர் தமிழக முதலமைச்சராக எத்தனை ஆண்டுகள் பணியாற்றினார்?
(அ) 5 (ஆ) 7 **(இ) 9** (ஈ) 15

70. தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவருமானவர் – உப்பு சத்தியாகிரகத்தை எடுத்து நடத்தி கைது செய்யப்பட் முதல் பெண்மணி
**(அ) திருமதி.ருக்மணி லட்சுமிபதி** (ஆ) சரோஜினி நாயுடு (இ) அம்புஜம்மாள் (ஈ) பார்வதி தேவி

71. எல்லா உயிர்களாலும் கைகூப்பித் தொழப்படுபவர் யார்?
(அ) தவம் செய்தவன் (ஆ) அரசன்
**(இ) கொல்லான் புலால் மறுத்தான்** (ஈ) நுண்மான் நுழைபுலம் இல்லான்

72. நூலோர் தொகுத்த அறங்களுள் தலையாய அறமாகத் திகழ்வது எது எனத் திருக்குறள் வலியுறுத்துகிறது?
(அ) பிற உயிர்களின் துன்பத்தை நீக்குதல் (ஆ) பிறர் மனைவியை விரும்பாமல் இருத்தல்
(இ) பிற உயிர்களிடத்து அன்பு செலுத்துதல் **(ஈ) பகிர்ந்து உண்டு உயிர்களைப் பாதுகாத்தல்**

73. ஆபுத்திரனே!
அமுதசுரபியைத் தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கையில் இருப்பதோ
பிச்சைப்பாத்திரம்
– ஆபுத்திரன் யார்? அமுதசுரபி எது?
(அ) அரசன், அட்சயபாத்திரம் **(ஆ) காந்தியடிகள், விடுதலை**
(இ) மணிமேகலை, அட்சயபாத்திரம் (ஈ) காமதேனு, கற்பகத்தரு

74. "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே"
– என்ற புறநானூற்றுப் பாடலில் கீழ்ப்பால், மேற்பால் என்பதன் உட்கருத்து யாது?
(அ) வறுமை, வளமை
(ஆ) இனப்பாகுபாடு
**(இ) பிறப்பினால் வரும் சிறப்பினும் கல்வி அறிவினால் எய்தும் பெருமை**
(ஈ) எல்லோரும் கல்வி கற்று மேம்பட வேண்டும்

75. கூற்று (A): அதுவரை நாட்டைப் பிரிவினை செய்யும் முயற்சிக்கு எதிராக இருந்த காந்தியடிகள் முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்றார்.
காரணம் (R): லீக் "நேரடி நடவடிக்கை நாளில் ஈடுபட அழைத்ததோடு கல்கத்தாவில் கலவரங்களும் கொள்ளைகளும் நடந்தேரின"
**(அ) கூற்று (A) சரி காரணம் (R) கூற்றை விளக்குகிறது**
(ஆ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு
(இ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி
(ஈ) கூற்று (A) சரி ஆனால் காரணம் (R) கூற்றை விளக்கவில்லை

76. இந்திய தேசிய காங்கிரசில் நீண்ட காலம் தலைவராக இருந்தவர் யார்?
(அ) பானர்ஜி (ஆ) ராஷ் பிகாரி கோஷ் **(இ) அபுல்கலாம் ஆசாத்** (ஈ) அன்னிபெசண்ட்

77. கீழ்க்கண்ட கூற்றுகளில் எ.ஓ.ஹீயமை பற்றி சரியான கூற்று யாது?
1. 1883 மற்றும் 1884 ஹீயும், ரிப்பன் பிரபுவிற்கு ஆலோசகராக பணிபுரிந்தார்.
2. பிரம்மஞான சபை என்ற அமைப்போடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.
3. 1884இல் இந்திய தேசிய யூனியனை ஆரம்பித்தார்.
4.இந்திய தேசிய யூனியனின் நோக்கம் இந்திய தேசியமாக இருந்தது.
(அ) 1, 2, 3 சரியான கூற்று 4வது கூற்று தவறானது (ஆ) 1, 2 கூற்று சரியானது 3, 4 கூற்று தவறானது
(இ) 1, 4 கூற்று சரியானது, 3, 2 கூற்று தவறானது **(ஈ) 1, 2, 3, 4 கூற்று சரியானது**

78. மனிதவள மேம்பாட்டு குறியீடு எதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது?
1. கல்வி நிலை.
2.ஆயுட்காலம்.
3.வாழ்க்கைத் தரம்.
4. இடப்பெயர்ச்சி இல்லாமை
(அ) 1, 2 மற்றும் 4 (ஆ) 1, 3 மற்றும் 4 (இ) 2, 3 மற்றும் 4 **(ஈ) 1, 2 மற்றும் 3**

79. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன வளர்ச்சி சட்டம் 2006ன் கூற்றுப்படி சிறு நிறுவனத்தின் மூலதனத் தொகை ----------- ஆகும்.
(அ) 1 லட்சம் – 25 லட்சம் **(ஆ) 25 லட்சம் – 5 கோடி**
(இ) 5 கோடி – 10 கோடி (ஈ) 10 கோடிக்கு மேல்

80. "ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில், அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை" – இந்தக் கூற்றை கூறியவர்.
(அ) மகாத்மா காந்தியடிகள் (ஆ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர்
**(இ) திருவள்ளுவர்** (ஈ) ஜவஹர்லால் நேரு

81. பின்வரும் கூற்றை கவனிக்க:
1. பிமரு மாநிலங்கள் அதிக மக்கட் தொகை கொண்டுள்ளன.
2. பிமரு மாநிலங்கள் குறைவான மக்கட் தொகை கொண்டுள்ளன.
3. பிமரு மாநிலத்தில் எழுத்தறிவு விகிதம் அதிகமாக உள்ளது.
4. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் பிமரு மாநிலங்களில் தலா வருமானம் அதிகம்.
மேலே கண்டவற்றுள் எவை சரியான கூற்று?
(அ) 2 மற்றும் 3 (ஆ) 3 மற்றும் 4 (இ) 1 மற்றும் 2 **(ஈ) 1 மட்டும்**

82. பின்வரும் வாக்கியம் I மற்றும் II கவனிக்கவும்.
சரியான விடையை தேர்வு செய்க:
1. பாராளுமன்றம் மத்திய பட்டியலில் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றது.
2 பொதுப்பட்டியல் மற்றும் மாநில பட்டியலில் இடம் பெறாதவைகளில் பாராளுமன்றமே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளது.

(அ) 1 உண்மை 2 தவறு (ஆ) 1 தவறு 2 உண்மை
**(இ) 1 மற்றும் 2 உண்மை** (ஈ) 1 மற்றும் 2 தவறு

83. கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்தியாவின் உயர்நீதி மன்றங்களை கவனிக்கவும்:.
1. தில்லி உயர்நீதிமன்றம்.
2.ராஜஸ்தான் உயர்நீதிமன்றம்.
3. பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம்.
4. ஒரிசா உயர்நீதிமன்றம்.
இவை தொடங்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தவும்.
(அ) 4, 3, 2 மற்றும் 1 (ஆ) 2, 3, 4 மற்றும் 1 **(இ) 3, 4, 2 மற்றும் 1** (ஈ) 1, 3, 2 மற்றும் 4

84. கீழ்காணும் இவர்களில் எந்த பிரதம மந்திரி நம்பிக்கை இல்லா வாக்கெடுப்பின் மூலம் ராஜினாமா செய்யவில்லை.
(அ) H.D.தேவகவுடா (ஆ) வி.பி.சிங் **(இ) மன்மோகன் சிங்** (ஈ) ஏ.பி.வாஜ்பாய்

85. அரசியலமைப்பு 44வது திருத்த சட்டம் 1978, சொத்துரிமையை
1. அடிப்படை உரிமையிலிருந்து சட்ட உரிமையாக மாற்றியது.
2. சட்ட உரிமையிலிருந்து அடிப்படை உரிமையாக மாற்றியது.
3. அடிப்படை உரிமையிலிருந்து அரசியலமைப்பின் அடிப்படை கூறாக மாற்றியது.
மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானது?
**(அ) 1 மட்டும்** (ஆ) 2 மட்டும் (இ) 3 மட்டும் (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

86."வேற்றுமையில் ஒற்றுமை" என்ற கருத்தில், இந்தியா இனங்களின் அருங்காட்சியகம் என்று உள்ளது கீழே கூறப்பட்டுள்ள கூற்றில் எது சரியானவை?
1. இந்தியாவில் பெரும்பான்மை மக்கள், இமயமலையிலிருந்து வந்த மக்களின் வழித் தோன்றல்கள்.
2.வேறுபட்ட இனமக்கள் பொதுவான இயற்கை உடல் அமைப்பு மற்றும் உணவு பழக்கத்தையும் கொண்டு இருந்தனர்.
(அ) 1 (ஆ) 2 **(இ) 1 மற்றும் 2** (ஈ) 1ம் அல்ல 2ம் அல்ல

87. இந்தியாவில் முதன்முதலில் நிலக்கொடை பற்றிப் பேசும் கல்வெட்டு அமைந்துள்ள இடம் எது?
(அ) அலகாபாத் (ஆ) கிர்னார் **(இ) நாசிக்** (ஈ) பாட்னா

88. 1739ம் ஆண்டு பெர்சிய மன்னர் நாதிர்ஷா இந்தியாவின் மீது படையெடுத்த பொழுது இந்தியாவை ஆட்சி செய்த முகலாய மன்னரின் பெயரைக் குறிப்பிடுக:
(அ) பகதூர்ஷா –I (ஆ) பருக்கூஷியர் **(இ) முகம்மது ஷா** (ஈ) அகம்மது ஷா

89. யாருடைய காலம் "சூத்திர கிரந்த காலம்" என்று அழைக்கப்படுகிறது?
**(அ) மௌரியர்கள் காலம்** (ஆ) குப்தர்களின் காலம்
(இ) சாளுக்கியர்களின் காலம் (ஈ) சோழர்களின் காலம்

90. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஹரப்பா பற்றிய கூற்றுகளில் எது தவறானது?.
1. ஹரப்பாவின் சுவர்கள் வலிமையற்றவை.
2. டேக்டானிக் குளறுபடிகளால் நகரம் அழிவுற்றது.
3. சிறிய தலையையுடைய அர்மீனிய மண்டை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. ஹரப்பா கி.மு.1750–க்குப் பிறகு அழிவுற்றது.
(அ) 1 மற்றும் 2 சரி 3 மற்றும் 4 தவறு (ஆ) 1 சரி 2, 3 மற்றும் 4 தவறு
**(இ) 1 தவறு 2, 3 மற்றும் 4 சரி** (ஈ) 1, 2 மற்றும் 3 தவறு 4 சரி

91. சர்வதேச சுனாமி தகவல் மையம் அமைந்துள்ள இடம்
(அ) ஜகார்த்தா, இந்தோனேசியா **(ஆ) ஹொனலுலு, அமெரிக்கா**
(இ) புதுச்சேரி, இந்தியா (ஈ) கொலராடோ, அமெரிக்கா

92. 18ஆம் நூற்றாண்டின் புளுமென்பெக்கின் 5 வகையான உலக மனித இன வகைபாடு இதன் அடிப்படையிலானது.
(அ) சிகை வடிவம் (ஆ) மூக்கின் வடிவம் (இ) விழி வண்ணம் **(ஈ) சரும நிறம்**

93. ஜோரம் பெரிய உணவு பூங்கா அமைந்துள்ள இடம்
(அ) ஆந்திரப்பிரதேசம் (ஆ) திரிபுரா **(இ) மிசோரம்** (ஈ) உத்திரப்பிரதேசம்

94. இந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய உப்பங்கழி ஏரி
(அ) பழவேற்காடு ஏரி (ஆ) கொல்லெரு ஏரி (இ) நாராயண் சரோவர் ஏரி **(ஈ) சில்கா ஏரி**

95. கீழ்கண்டவற்றைப் பொருத்துக:

| புகழ்பெற்ற நபர் | தனித்துறை |
|---|---|
| அ. சத்யா நாதெல்லா | 1. தொலையுணர்வு |
| ஆ. சித்தார்த் முகர்ஜி | 2. பொருளாதாரம் |
| இ. கீதா கோபிநாத் | 3. மேகத்தொகுப்பு |
| ஈ. S.K.சிவக்குமார் | 4. மருத்துவம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **3** | **4** | **2** | **1** |
| இ. | 4 | 3 | 1 | 2 |
| ஈ. | 2 | 1 | 4 | 3 |

96. பொறியியல், மானிடவியல், சமூக அறிவியல் போன்ற பாடத் தொகுதிகளை தேசிய அளவில் திறந்த இணைய வழி கல்வியாக அளித்துக் கொண்டிருக்கும் திட்டம் இதுவாகும்.
(அ) சுபம் (Subam) **(ஆ) ஸ்வயம் (Swayam)** (இ) சுயம் (Suyam) (ஈ) ஸ்வத்யம் (Swasthyam)

97. --------- பாக்டீரியாவால் கம்பளி பிரிப்போர் நோய் உருவாகிறது
**(அ) பேசிலஸ் ஆந்த்ராசிஸ்** (ஆ) பேசிலஸ் செரியஸ்
(இ) பேசிலஸ் மெகாட்டேரியம் (ஈ) பேசிலஸ் சப்டிலிஸ்

98. புளுமின் கற்பித்தல் நோக்கங்களின் வகைப்பாடு விளக்குவது (விவரிப்பது)
(அ) அறவுசார் மற்றும் உளசார் களங்கள்
(ஆ) அறிவுசார் மற்றும் உள–இயக்கம் சார் களங்கள்
**(இ) அறிவுசார், உளசார் மற்றும் உள–இயக்கம் சார் களங்கள்**
(ஈ) உளசார் மற்றும் உள–இயக்கம் சார் களங்கள்

99. கீழ்காண்பவற்றுள் எது காந்த சேமிப்பு சாதனம் ஆகும்?
(அ) DVD (ஆ) பென் டிரைவ் (இ) குறுந்தகடு **(ஈ) பிளாப்பி தகடு**

100. சாதாரண நிலையிலிருந்து மீக்கடத்து நிலைக்கான மாற்றம் வெப்ப இயக்கவியலின் படி
(அ) சுழியானது (ஆ) தொடர்ச்சியற்றது (இ) மீள முடியாதது **(ஈ) மீளக்கூடியது**